Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 9 செப்டம்பர் - 2022

தனிப்பிரதி
ரூ.10/-



ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

CHURCH OF CHRIST
PROCLAM THE GOSPEL
KANGAYAM - 638 701. INDIA

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்
இணைந்து நடத்தும்

**இருபத்தைந்தாம் வேதாகம கருத்தரங்கம்**

**25th Annual Bible Lectureship**

கருப்பொருள் : கர்த்தரையே சேவிப்போம்
THEME : We Will Serve the Lord

**நாள் : அக்டோபர் 4, 5 - 2022 ( செவ்வாய், புதன் )**
(அரசு விடுமுறை நாட்கள்)

நேரம்
செவ்வாய் : காலை 8:45 - மாலை 4:45 மணி
புதன் : காலை 8:45 - மதியம் 1:00 மணி

இடம்
கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.

## ஆசானின் அறிவுரையிலே ...

1. ஆசிரியர் உரை 3
2. தேவனுடைய பிரமாணம் 12
3. பெண்கள் பகுதி 15
4. வாலிபர் பகுதி 18
5. சிறுவர் பகுதி 22
6. என் ஜனம் 24
7. கிறிஸ்து என்னும் மார்க்கம்... 28
8. கானான் தேசமும், கர்த்தரு... 32

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.35 September - 2022 Issue - 9


ஆசிரியர் உரை

## இப்பொழுது அறிந்திருக்கிறேன்!

இப்பூவுலகில் வாழும் மிகப்பெரும்பான்மையான மக்களால் அபாரமாக அறிந்து வைக்கப்பட்டிருக்கும் உன்னதமான தேவ மனிதர்களில் ஒருவராக இருப்பவர்தான் முற்பிதாக்களில் தலாமவரும், விசுவாசிகளின் தகப்பனுமாகிய ஆபிரகாம். இங்கே. மிகப்பெரும்பான்மையான மக்கள் என்று நான் குறிப்பிடுவதற்கு காரணம் இல்லாமலில்லை. எப்படியெனில், சுமார் 2 கோடி அளவு மக்கள் தொகை கொண்டு சரித்திரத்தின் பல்வேறு கட்டங்களில் உலகெங்கும் சிதறிப் பரவலாக வாழ்ந்து வரும் பாரம்பரியம் கொண்ட யூதர்களாலும், சுமார் 150 கோடிக்கும் மேலான மக்கள் தொகை கொண்டு உலகின் பல பகுதிகளில் வைராக்கியத்தோடு வாழ்ந்து வரும் இஸ்லாமியர்களாலும், இன்னும் சுமார் 300 கோடி மக்கள் தொகையோடு உலகெங்கும் வாழ்ந்து வரும் விதவிதமான கிறிஸ்தவ சமுதாயத்தாலும், தன் பக்தி சிரத்தைக்காகப் பெரும் மரியாதை பெற்றிருக்கும் பக்திப் பிழம்பு தான் ஆபிரகாம்.

இந்த ஆபிரகாமைத் தான். தேவன் ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, அவன் எழுபத்தைந்து வயது நிறைந்து, பிள்ளையில்லாமல் இருந்த நிலையில், **உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ** (ஆதி. 12:1) என்று சொன்னார். பிறகு நீண்ட காத்திருக்குதலுக்குப் பிறகு (ஆதி. 21:5) நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் என்கிற வாக்கிற்கிணங்க ஈசாக்கைத் தந்து,அவன் தன் அப்பாவித்தனத்தைக் கடக்காத பருவத்தில் (ஆதி. 22:7). அவனை பலியாகக் கொடுக்கும்படி கட்டளையிட்டு, அந்த ஆணைக்கு அடிபணிய ஆபிரகாமுக்கு மனப்போராட்டம் மலையளவு இருந்த நிலையிலும், அது தேவ கட்டளையென்பதால் மனப்பூர்வமாய் ஏற்று.

பாடுகளும், பயங்களும் பல மடங்கு இருந்தாலும், அவ்வாணையை நிறைவேற்றத் தன்னை முழுமையாய் ஈடுபடுத்தி, என்ன நடக்கும் என்று ஏதும் தெரியாத நிலையில் தன் மனதிலே ஈசாக்கை பலி செலுத்தி விட்டு (எபி. 11:17), அதைச் செயலிலே வெளிப்படுத்தும்படியாய் **தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.** அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே. ஆபிரகாமே என்று கூப்பிட்டு... பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியால் **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்றார் (ஆதி. 22:11,12).

பரலோகத்தின் தேவன், **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று கூறுவது ஏதோ வார்த்தைப் பிசகால் நேர்ந்த ஒன்று என்று எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், தான் விரும்பாத ஒன்றை வெளிப்படுத்த அவர் நம்மைப் போன்ற ஒரு மனிதர் அல்ல. அப்படியானால், இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்பதற்குப் பலமான காரணங்கள் இருக்கவே வேண்டும். ஆம், தேவகட்டளையின்படி ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்ட அந்த நெஞ்சு நெகிழும் நிகழ்வு வெளிப்படுத்திய சில உண்மைகளை, சில தன்மைகளை, சில பக்தி லட்சணங்களை, ஆபிரகாம் சம்பந்தப்பட்ட ந்தின காரியங்கள் தெரிவிக்க வில்லையென்றே தெரிகிறது. **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று கர்த்தர் சொன்னபோது, ஆபிரகாம் அழைக்கப்பட்டு எப்படியும் ஒரு நாற்பது ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். இந்தக் கால கட்டத்தில், விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம். தன்னை அழைத்த தேவன் மீது நம்பிக்கை கொண்டு, அவருக்காகவும், அவர் நிமித்தமும் பல பக்திக் காரியங்களை நடப்பித்துள்ளார். ஆனால், அவைகளில் எதுவும், **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று தேவனால் சொல்லப்படுவதற்குத் தேவனுடைய பார்வையில் போதுமானதாக இருக்க வில்லையென்றே தெரிகிறது.

உதாரணமாக, தேவ அழைப்பை ஏற்று எல்லாவற்றையும் விட்டு, முன்பின் தெரியாத ஒரு தேசத்திற்குப் போனான் அல்லவா (ஆதி. 12:1) அப்போது, **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று தேவன் சொல்லவில்லை. அப்படிப்போகும் போது, பலிபீடம் கட்டு என்று கட்டளையிடப்படாத நிலையில் ஆபிரகாம், **கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி ''அவரைத் தொழுது கொண்டான்** அல்லவா (ஆதி. 12:7,8). அப்போதும் தேவன் இப்படிச் சொல்லவில்லை. மேலும், தன்னால் நன்மையும், தேவ தயவும் பெற்ற, தன்னைக் காட்டிலும் வயதில் குறைந்த லோத்துவிடம், **நாம் சகோதரர்** என்கிற காரணத்தினிமித்தம் முழுமையாக விட்டுக் கொடுத்துப்

பெருந்தன்மை காட்டினான் அல்லவா (ஆதி. 13 அதி.) அப்போதும் தேவன் இப்படிச் சொல்லவில்லை. அத்தோடு, ஏற்கனவே கொடுத்த வாக்கு இன்னும் நிறைவேறாத நிலையில். **உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போல் திரளாய் இருப்பார்கள்** என்று சொன்னதை மீண்டும் விசுவாசித்தான் அல்லவா (ஆதி. 15:5,6), அப்போதும் இப்படிச் சொல்லவில்லை. இன்னும், விருத்தசேதன உடன் படிக்கையை தேவன் ஏற்படுத்தின போது, அறுவைச் சிகிச்சையைப் பற்றிய எந்த ஒரு அறிவும் இல்லாத நிலையில் தன்னுடைய தொண்ணூற்றொன்பதாம் வயதில் தனக்கு விருத்தசேதனம் செய்துகொண்டு, தன்னோடிருந்த ஆண் மக்கள் எல்லோருக்கும் விருத்தசேதனம் செய்வித்தான் அல்லவா (ஆதி. 17:24,25) அப்போதும், தேவன் இப்படிச் சொல்லவில்லை.

மேற்கண்ட இந்தச் செயல்களும், சம்பவங்களும் ஆபிரகாமின் பக்திக்கு உகந்த உதாரணங்களாக இருந்தாலும், **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று சொல்லப்படுவதற்கு போதுமானதாயிருக்கவில்லையென்றே தெரிகிறது. இங்கே எந்த ரீதியிலும் ஆபிரகாமின் பக்திச் செயல்பாடுகளை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆயினும், ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுக்க முன்வந்த சம்பவம் தான் **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்பதற்குத் தேவனுடைய பார்வையில் போதுமானதாக இருந்துள்ளது!

அருமையானவர்களே, நமக்கெல்லாம் இது நம்முடைய பக்தி வாழ்வு சம்பந்தமாக ஒருவிதமான பயத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. நாமெல்லாரும், நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக உள்ளோம் என்பதற்கு நாம் அவ்வப்போது நடப்பிக்கிற சின்னச்சின்ன பக்திச் செயல்பாடுகளே போதும் என்று எண்ணி வாழ்ந்து கொண்டுள்ளோம். ஆனால், உண்மை நிலைமையோ தலைகீழாய் இருக்கிறது. அப்படித்தானே? ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று தேவனால் கருதப்படுவதற்கு அவன் நடப்பித்த தேர்ந்த பக்திச் செயல்பாடுகளே போதுமானதாக இல்லாதபோது நம்முடைய சில்லறைச் செயல்பாடுகளெல்லாம் எங்கே நிற்கப் போகிறது? என்றைக்காவது நேரம் கிடைக்கும் போது ஆராதனையில் பங்கு பெறுவது, நோய், நொடி வந்தால் ஜெபிப்பது, பொழுதே போகவில்லையென்றால் வேதாகமத்தை எடுத்துப் படிப்பது, பிச்சைக்காரனுக்குக் கொடுப்பது போன்று கைக்கு வந்ததைக் காணிக்கையாகக் கொடுப்பது, சுவிசேஷத்தின்படியான இரட்சிப்பு, நடைமுறைப் பக்தி வாழ்வு, பரலோகம் போன்றவற்றைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல் இருப்பது போன்றவைகளெல்லாம் தேவனுடைய பார்வையில் நம்மை எப்படியாகப் பார்க்கும்படி செய்யும் என நினைக்கிறீர்கள்?

தேவனுடைய பார்வையில் ஒருவன் தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று கருதப்படாத நிலையில், தேவ ஆசீர்வாதம் என்பது கானல் நீராகவே இருக்கும். ஆபிரகாமை தேவன் அழைத்த போதும், அந்த அழைப்பை ஏற்று ஆபிரகாம் தன் பக்திக் காரியங்களை நடப்பித்துக் கொண்டிருந்த போதும், அவனுக்குப் பலவித ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும் என்று தான் வாக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது, இனிவரும் காலங்களில் கொடுக்கப்படும் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று சொல்லப்பட்டதற்குப் பிறகு, **கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்** (ஆதி, 24:1) என்று வசனம் கூறுகிறது. அப்படியானால், தேவ ஆசீர்வாதம் எதோடு சம்பந்தப்பட்டிருக்கிறதென்று உங்களுக்குப் புரிகிறதா? நாம் நமக்குத் தேவையான ஆசீர்வாதங்கள் இல்லாதவர்களாக ஏன் உள்ளோம் என்று இப்போதாவது விளங்குகிறதா?.

சரி, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்ததற்குப் பிறகே. **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று தேவன் சொல்லுகிறபடியால், ஆபிரகாமின் மற்ற பக்திச் செயல்பாடுகளில் காணப்படாத என்னென்ன சிறப்புத் தன்மைகள் இச்சம்பவத்தில் காணப்படுகிறதென்றும், அவைகளிலிருந்து நமக்கு எப்படிப்பட்ட பாடங்கள் கிடைக்கிறதென்றும் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

### I செவி கொடுக்கிறவனாயிருந்தான் (ஆதி. 22:1,2)

**நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று கர்த்தருடைய தூதனால் சொல்லப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக முதலாவது நமக்குத் தெரிவது, ஆபிரகாமின் செவி கொடுக்கும் குணம்.

பொதுவாகவே, ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செம்மையாய்ச் செய்வதற்கு, அந்தக் காரியம் சம்பந்தமாக என்ன சொல்லப்படுகிறதோ அதை கவனிக்க வேண்டியது முக்கியம், தேவ காரியத்திலும் இது உண்மையாகவே உள்ளது. இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல். தேவன் சொன்னதைக் கேட்க வேண்டிய விதத்தில் கேட்காமல், தேவ கட்டளையை மீறிப் பாவம் செய்த போது சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு எப்படி இடித்துரைக்கப்பட்டான் என்று கவனியுங்கள். '' **அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்** (1 சா. 15:22) என்று. செவி கொடுத்தல் உத்தமம் என்று பரிசுத்த ஆவியானவர் விளம்புவதைக் கவனியுங்கள். ஆனால், ஆபிரகாம் செவி கொடுக்கிறவனாக இருந்துள்ளான்.

அவனுக்குச் சொல்லப்பட்ட காரியங்கள் என்ன சாதாரணமானவைகளா? **.... உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியிடு** என்றார் (ஆதி. 22:1,2). இந்த வார்த்தைகளுக்கு ஆபிரகாம் செவி கொடுத்துள்ளான் என்பதை நம்புவதற்கே கடினமாக உள்ளது. நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்?

ஸ்தேவானுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் போல் நம்முடைய காதுகளை அடைத்துக்கொண்டு (அப். 7:57) ஒன்றும் தெரியாதவர்கள் போல் இருந்திருப்போம். ஆமாந்தானே.

அருமையானவர்களே! நம்முடைய பக்தி வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமானதை நடப்பிக்கச் செவி கொடுத்தல் மிகவும் அவசியம். பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் இரட்சிப்படைந்ததற்கான காரணங்களில் ஒன்று அவர்கள் செவிகொடுத்ததுதான். அவர்கள் செவி கொடுக்காமலிருந்திருந்தால் இன்றைக்கு நாம் அப்பிரசங்கம் பற்றிப் பேச வேண்டிய அவசியமே இருந்திருக்காது. அங்கே, பேதுரு அப்போஸ்தலன் பிரசங்கத்தை ஆரம்பித்த விதத்தைப் பாருங்கள். **அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று. அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள்** (அப். 2:14) செவி கொடுக்காமல் இருந்திருந்தால், அன்றைய தினம் 3000 பேர் இரட்சிப்படைந்திருக்க முடியுமா? ஆகவே, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளுக்கும், கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும் கீழ்ப்படியும்படியாய் முதலாவது அவைகளுக்குச் செவி கொடுக்கிறவர் களாயிருப்போம். ஒருவேளை அவை எவ்வளவு கடினமானதாக, சவால் நிறைந்ததாக இருந்தாலும் ஆபிரகாமைப் போல நாம் முதலாவது செவி கொடுப்போம்.

## II **துரிதமாய்ச் செயல்படுகிற வனாயிருந்தான் (வசனம் 22:3)**

**நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று கர்த்தருடைய தூதனால் சொல்லப்பட்டதற்கான காரணங்களில் இரண்டாவதாக நமக்குத் தெரிவது, சொல்லப்பட்டதை நிறைவேற்றுவதற்கான ஆபிரகாமின் துரிதச் செயல்பாடு.

எப்பொழுதுமே ஒரு செயலை நிறைவேற்றுவதில், அந்தச் செயல் சம்பந்தமான சாதக பாதகங்கள் முக்கியப்பங்கு வகிக்கும். இது பொதுவான ஒன்றுதான். சாதகமாகவும், நன்மையாகவும் இருந்தால்

வேகமான நடவடிக்கைகள் அங்கே இருக்கும். பலன் பாதகமாகவும், விளைவு தீமையாகவும் தெரியுமானால் தேவையற்ற தாமதமும், இழுத்தடிப்பும் காரணமின்றி இருக்கும். இதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால், நம்முடைய ஆபிரகாம் இந்தப் பொதுவான கோட்பாட்டிற்கு விதிவிலக்கானவனாக இருந்துள்ளான். ஆம், தேவன் கட்டளை யிட்டதை நிறைவேற்றும்படி ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின் மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் (ஆதி. 22:3),இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான் (ஆதி 22:3)

ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டவைகள் என்ன லேசான காரியமா? எளிதில் சீரணிக்கக் கூடிய ஒன்றா? அல்லது போகிறபோக்கிலே தான் அவைகளை எடுத்துக் கொள்ள டியுமா? சொல்லுங்கள். நினைத்தால் குலையெல்லாம் நடுங்குகிறது. இந்த ஆபிரகாம் என்ன மனிதனோ தெரியவில்லை! கர்த்தர் சொன்னதை நிறைவேற்ற அதிகாலையில் புறப்பட்டு விட்டான். கர்த்தர் கட்டளையிட்டது மாலை நேரமாயிருந்தபடியால் விடியும் வரை காத்திருப்பானோ? கட்டளையிட்டது காலை நேரமாயிருந்திருந்தால் அதிகாலை வரைக்கும் கூடகாத்திருக்காமல் உடனடியாகப் புறப்பட்டிருந்திருப்பானோ? யாருக்குத் தெரியும்? இந்த மாமனிதனின் செயல்பாடு நம்டைய அறிவுக்கா எட்டுகிறது?. எப்படியோ ஆபிரகாம் தேவ கட்டளையை நிறைவேற்ற அதிகாலையில் எழுந்து கொண்டான் என்பது நமக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒன்றாக உள்ளது. அவன் எவ்விதக் காலதாமதமும் செய்யவில்லை.

அப்படியானால், அருமையானவர்களே, தேவ காரியத்தில் நம்டைய செயல்பாடு எந்தளவில் உள்ளது? தேவ கட்டளைகளைக் கேட்டு, அவைகளை ஏற்றுச் செயல்படுகிற காரியத்தில் நாம் துரிதமானவர்களாக உள்ளோமோ அல்லது தாமதிக்கிறவர்களாக உள்ளோமா? அப்போஸ்தலன் பவுலடியார் புகழ் பெற்ற மார்ஸ் மேடையின் மீது நின்று அத்தேனருக்குச் செய்த பிரசங்கத்தின் ஒரு வசனத்தை இங்கே கவனியுங்கள். அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்கு முள்ள மனுதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப். 17:30). மனந்திரும்பி, இரட்சிப்படைய வேண்டுமென்பது தேவ கட்டளையாயிருக்கிறது. இத்தேவ கட்டளையை ஏற்று செயல்படுகிற காரியத்தில் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? ஆபிரகாம் துரிதமாய்ச் செயல்பட்டான் என்று அவனை வாயாரப் புகழ்ந்து விட்டு, நீதியை நடப்பிப்பதில் நாம் காலம் கடத்துகிறவர்களாக உள்ளோமா? சமயம், சந்தர்ப்பம் எப்போதும் நம் கதவைத் தட்டிக் கொண்டே இருக்காது. ''அனுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவி கொடுத்து. இரட்சணிய நாளிலே உனக்கு உதவி

செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே: இதோ, இப்பொழுததே அநுக்கிரககாலம் இப்பொழுதே இரட்சணிய நாள்'' (II கொரி 6:2) என்ற சிந்தையோடு தேவனுக்கடுத்த காரியங்களை நாம் நடப்பிக்கிறவர்களாக இருப்போம்.

கால தாமதம், அதிலும் குறிப்பாக கர்த்தரின் காரியத்தில் காலதாமதம் எப்போதும் நன்மையானதை நடப்பிப்பதில்லை. அதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஆளுநர் பேலிக்ஸ். அப்போஸ்தலன் பவுல் ஒரு சமயம் இவனுக்கு முன்பாக விசாரணைக் கைதியாக நின்று நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம். எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன்'' என்றான் (அப். 24:25).இப்படிச் சொல்லி தேவ காரியத்தில் உடனடியாகச் செயல்படும் வாய்ப்புக் கிடைத்தும் செயல்படாமல் கால தாமதம் செய்தான். ஆனால், இவனுக்கு மறுபடியும் சமயம் கிடைத்ததாக நாம் வேதாகமத்தில் எங்கும் காண முடியவில்லை. இவன் துரிதமாய்ச் செயல்பட்டிருந்தால், தன் ஆத்துமாவை இரட்சித்து, நித்திய அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றியிருக்கமுடியும். 'இவனைக் காலதாமதத்தின் தகப்பன்'' என்றும், லோத்தின் மனைவியைக் கால தாமதத்தின் தாய் என்றும் சென்னால் தவறில்லையோ!

### III **முழு நம்பிக்கை கொண்டவனாயிருந்தான் (வச. 8)**

''நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்'' என்று கர்த்தருடைய தூதனால் சொல்லப்பட்டதற்கான காரணங்களில் மூன்றாவதாக நமக்குத் தெரிவது, அவன் தேவன் மீது கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை.

தேவன் மீது நம்பிக்கை வைப்பதில் இரண்டு நிலைகள் உள்ளது. ஒன்று, எல்லாம் நம்முடைய நினைப்பின்படியாகவும். திட்டத்தின்படியாகவும் நடக்கும் போது வைக்கும் நம்பிக்கை. இன்னொன்று. எல்லாம் தாறுமாறாகவும், எதிராகவும் நடக்கும் போது வைக்கும் நம்பிக்கை. இது பொதுவான ஒன்று. முதல் வகை நம்பிக்கை பெரும்பாலும் யாருக்கும் பிரச்சினையாக இருக்காது. ஏனெனில், இந்த நம்பிக்கையில் சிரமம் ஏதுமில்லை. ஆனால், இரண்டாவது வகை நம்பிக்கை அப்பப்பா, அது எல்லோராலும் முடிகின்ற ஒன்றல்ல. இதற்குத் தேவனைப் பற்றிய ஆழ்ந்த அறிவும், அவருடைய வழி நடத்துதல் பற்றி உறுதியான பிடிப்பும் வேண்டும். இதற்குப் பக்தன் யோபு ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன் என்றான் '' (யோபு. 13:15). இப்படிப்பட்ட நம்பிக்கை எப்பொழுதும் ஏட்டளவில் தான் இருக்க வேண்டுமா?

நம்டைய அன்றாட பக்தி வாழ்க்கையில் இருக்கக்கூடாதா? சிந்திப்போம்.

யோபுவுக்கு இருந்த அதே விதமான நம்பிக்கை. தான் அங்கே ஆபிரகாக்கு இருந்தது. இங்கே வசனத்தைப் பாருங்கள். அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி என் தகப்பனே என்றான்; அதற்கு அவன் என்மகனே. இதோ, இருக்கிறேன் என்றான். அப்பொழுது, அவன்: இதோ, நெருப்பும், கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம் என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான் (ஆதி. 22:7.8), அவ்வளவு தான். தேவன் பார்த்துக் கொள்வார் என்னே நம்பிக்கை!! இதுவல்லவா விசுவாசம்!!! ஒருவேளை ஆபிரகாம். தேவன் பேரில் முழுமையான நம்பிக்கை வைக்காதவனாய் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? ''தகன பலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே என்ற ஈசாக்கின் கேள்வி, ஆபிரகாமை ஓர் உலுக்கு உலுக்கி தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தையே துவம்சம் செய்திருக்கும்''.

ஆம், அந்திய காலத்தில் பெற்றெடுத்த நேச குமாரன் அப்பாவித்தனமாக இப்படி ஒரு கேள்வியைக் கேட்கும் போது எந்தத் தகப்பனால் அதைத் தாங்கிக் கொள்ள டியும்? அடிமைப் பெண்ணாகிய ஆகாருக்குப் பிறந்த இஸ்மவேலின் பிரிவையே தாங்க டியாதவன் தானே இந்த ஆபிரகாம் (ஆதி. 21:10), அப்படிப் பட்டவன் வாக்குத்தத்தத்தின் குமாரன், ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டபோது சும்மாவா இருந்திருப்பான்? அவன் எப்படித் துடியாய்த் துடித்திருப்பான் என்பதைத் துல்லியமாக விளக்க எனக்குப் போதுமான அறிவில்லாதபடியால் உங்கள் யூகத்துக்கே விட்டுவிடுகிறேன். ''விசுவாசிகளின் தகப்பன்'' என்னும் ஒரு சிறப்பு மட்டும் இந்த ஆபிரகாக்குப் போதவே போதாது என்று நான் திடமாய் நம்புகிறேன்.

அருமையானவர்களே. ஈசாக்கைப் பலியிட ஒப்புக் கொடுத்த போது ஆபிரகாம் கொண்டிருந்த நம்பிக்கை, முழுமையான நம்பிக்கை. அபார நம்பிக்கை தான் இன்றைக்குத் தேவனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லக் கூடிய ஒவ்வொருவரிடத்திலும் தேவைப்படுகிறது. நம்டையதை இழந்து போகிற நிலையிலும், தேவன் பேரில் பற்றுதலாயிருப்பது தான் நம்பிக்கை. ஆபிரகாம் இன்னும் சிறிது நேரத்தில் தன் நேச குமாரன் இல்லை என்ற நிலையிலும் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தான். ''உன் நம்பிக்கை வீண் போகாது'' (நீதி. 23:18) என்று சொல்லும் தேவன் ஆபிரகாமின் நம்பிக்கைக்குக் காலத்தால் அழிக்க முடியாத பலனைத் தந்தார். '' நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்'' என்று.

இப்படிப்பட்ட நம்பிக்கை தான் நம் ஒவ்வொருவரிடமிருந்து தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது. நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக தேவனுடைய பார்வையில் காணப்பட

இப்படிப்பட்ட நம்பிக்கை அவசியம், அப்போஸ்தலன் பவுலுக்கு இதையொத்த நம்பிக்கை அவனுடைய ஊழியத்தின் பாதையில் இருந்தது. ஆகவே தான். கொரிந்தியருக்கு இப்படியாக எழுதியுள்ளார். நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையா யிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக் குள்ளே நிச்சயித்திருந்தோம், அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம் (1 கொரி. 1:10) என்றார்.

அன்பானவர்களே. இப்படிப்பட்ட நம்பிக்கை நம்மில் இருந்தால் தான், தேவனுடைய பார்வையில் ஆபிரகாம் போல் அவருக்குப் பயப்படுகிறவர்களாக இருப்போம். இப்படிப்பட்ட பயம் தான் நாம் ஆபிரகாம் போல் தேவனுடைய கட்டளைகளை அட்சரம் பிசகாமல் கைக்கொள்ளும்படி செய்யும். அப்படிக் கைக் கொள்ளுகிறவர்கள் தான் நியாயத்தீர்ப்பில் வெற்றி பெற்று (யோவான் 12:48) மறுமையை பேரின்பமான பரலோகில் கழிக்க முடியும்.

இப்படிப்பட்ட பாக்கியம் உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதாக! ஆமென்!!

✝

---

**கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஆசீர்வாதங்கள்**

1. *இரட்சிப்பு -2தீமோ 2:10*
2. *தேவனுடைய பிள்ளைகள் -கலாத் 3:26*
3. *புது சிருஷ்டி - 2கொரி 5:17*
4. *ஆவிக்குரிய ஆசீர்வாதம் எபே 1:3*
5. *மீட்பு - எபே 1:7*
6. *பாவமன்னிப்பு - கொலோ 1:14*
7. *விசுவாசம் - எபேசி 1 : 1*
8. *உன்னதங்களில் அமருதல் - எபே 2:6.*
9. *ஆக்கினை தீர்ப்பு இல்லை ரோமர் 8:1.*
10. *நித்திய ஜீவன் - 1யோ 5:11-12*
11. *சமாதானம் -1பேதுரு 5:4*
12. *விடுதலை - கலா 2:4*

# தேவனுடைய பிரமாணம்

Bro. J.C. சோட்

**பி**ரமாணம் அல்லது சட்டம் என்பது ஓர் ஆளுகை, அதிகாரம் மற்றும் ஒரு எல்லைக்குட்பட்ட பழக்கவழக்கங் களினால் ஏற்படுத்தப்படும் நடத்தை விதியாகும். இத்தகைய விதிகளின் ஒட்டுமொத்த அமைப்பும், இவ்விதிகளை அமுல் படுத்தக் கொண்டுவரப்படும் கட்டுப் பாடுகளும் பிரமாணம் அல்லது சட்டத்தில் உள்ளடக்கம். வேதாகமத்தில் பெரும்பாலும் பிரமாணம் என்பது மோசேயின் பிரமாணத்தையே குறிக்கிறது [யோவான் 1 :17]. புதிய பிரமாணம் அல்லது சட்டமாக இருந்தாலும் சரி, எல்லாமே தேவனிடத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது. அதுமாத்திரமல்ல, உபசட்டங்களும் தேவனைத் தான் ஆதாரமாகக் கொண்டுள்ளது. இவ்வுலகிலுள்ள கிராமங்கள், பட்டணங்கள் மற்றும் தேசங்களில் கடைபிடிக்கப்படும் சட்டங்கள் எல்லாமே தேவசட்டத்தை அடிப்படையாகக் கொண்டவைகள் தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆதியிலிருந்தே மனிதன் சட்டங்களால் ஆளப்பட வேண்டும் என்று எண்ணி மனிதனுக்கான சட்டங்களை இயற்றுவது தேவனுக்கு அவசியமாயிற்று. எனவே, தேவன், மனிதனுக்கான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவைகளை அவன் செய்யாவிட்டால் அல்லது செய்யத் தவறினால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தார். காலப்போக்கில், மனித இனம் வளர வளர தேவனுடைய பிரமாணங்கள் அல்லது சட்டங்கள் அதிகரித்தன. மனிதன் தன் சக மனிதர்களோடு ஒழுக்க ரீதியான உறவைத் தொடரவும், இது மனித நலனுக்கான தேவனுடைய சட்டங்களாயிருக்கின்றன.

**முற்பிதாக்களின் பிரமாணம்**

பழைய ஏற்பாட்டில் இரண்டு பிரதான பிரமாணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. முதல் பிரமாணம் முற்பிதாக்களின் பிரமாணம் என்று அழைக்கப்பட்டது. முற்பிதா என்பவர் ஒரு குடும்பத்திற்குத் தலைவராக இருந்தார். அப்படி முற்பிதாக்களாய் இருந்தவர்களிடத்தில் தேவன் பேசினார், அவர்கள் அந்த வார்த்தைகளைக் குடும்ப அங்கத்தினர்களிடம் பகிர்ந்து கொள்வது வழக்கமாக இருந்தது. ஆதாம், நோவா, ஆபிரகாம்,

ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் நன்கு அறியப்பட்ட முற்பிதாக்களாக இருந்தார்கள். இந்த முற்பிதாக்களின் பிரமாணம் ஆதாமில் தொடங்கி மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படும் வரை சுமார் 2500 ஆண்டு காலம் வரை நீடித்தது. எபிரெய ஆசிரியர், **பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன்** என்று சொல்லும் போது இப்பிரமாணத்தைப் பற்றியே பேசுகிறார் (எபிரெயர் 1:1).

**மோசேயின் பிரமாணம்**

பழைய ஏற்பாட்டில் பேசப்பட்டிருக்கும் அடுத்த பிரமாணம் மோசேயின் பிரமாணம் ஆகும். இப்பிரமாணம் யாத்திராகமம் இருபதாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தேவன் மோசேயின் மூலம் பேசினதால் உண்டான பிரமாணமாகும். தேவன் மோசேயிடம் பத்துக் கட்டளைகள் உட்பட மனிதனுடைய ஒழுக்கரீதியான, சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய வளர்ச்சிக்கான கட்டளைகளைக் கொடுத்தார். இது எழுத்தால் எழுதப்பட்ட பிரமாணமாயிருந்தது. இதில் முதல் பத்துப் பிரமாணங்கள் கற்பலகைகளிலும், அது சம்பந்தமான மற்ற பிரமாணங்கள் அனைத்தும் புத்தக வடிவத்திலும் கொடுக்கப் பட்டது. அவைகளை ஜனங்கள் தங்கள் இருதயமாகிய பலகையிலும் எழுத வேண்டியது அவசியமாயிருந்தது. மேலும், மோசேயின் பிரமாணம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டது. இது கிரியைகளை உள்ளடக்கிய பிரமாணமாக இருந்தது. ஜனங்கள் அப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், சரீரப்பிரகாரமான தண்டனை உடனே அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. இப்பிரமாணம் மோசேயின் காலம் தொடங்கி, கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் வரை அமுலில் இருந்தது. அதாவது, மோசேயின் பிரமாணம் சுமார் **1500** வருடங்கள் நீடித்திருந்தது.

அன்பின் அப்போஸ்தலன் இப்பிரமாணத்தைப் பற்றிச் சொல்லும் போது, **எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின்** மூலமாய் உண்டாயின (யோவான் 1:17) என்று குறிப்பிடுகிறார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்**.**வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிர மாணத்திலுள்ள தெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு**

**சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று** சொன்னார் (மத்தேயு 5:17, 18). கிறிஸ்து சொன்னபடியே இது நிறைவேற்றிற்று. **மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்க தரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார்** ( லூக்கா 24:44). மேலும், கொரி.3:3; கொலோ.2:14; கலா.5:4 போன்ற வசனங்களை வாசியுங்கள்.

**கிறிஸ்துவின் பிரமாணம்**

தேவனுடைய பிரமாணத்தில் நாம் மற்றுமொரு பிரமாணத்தைப் பற்றி வாசிக்கிறோம் இது தேவனுடைய புத்தகமாகிய வேதாகமத்தில் காணப்படும் நிலையான மற்றும் நிறைவான பிரமாணமாகும். இதுதான் கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது கட்டளையாக இருக்கிறது. இப்பிரமாணம் அல்லது கட்டளையானது கிறிஸ்துவின் மூலமாகவும் அவரால் ஏற்படுத்தப் பட்ட அப்போஸ்தலர்கள் மூலமாகவும் நமக்குக் கொடுக்கப்பட்டது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் நமக்கு இப் பிரமாணத்தை கிறிஸ்துவிடமிருந்து பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் பிரமாணம், கிறிஸ்துவின் மரணத்திலிருந்து நடைமுறையில் உள்ளது. இப்பிரமாணம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நம்மைக் கட்டுப்படுத்துகிறதாக இருக்கிறது. மேலும், இப்பிரமாணம் இவ்வுலகிலுள்ள எல்லா மக்களுக்காகவும் கொடுக்கப்பட்டது. **நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்** (மாற்கு 16:15) என்றார் இயேசு. எபிரெய ஆசிரியரும், **இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்** என்று எபிரெயர் 1:2 –ல் தெளிவுபடுத்தினார். மேலும், அந்த மறுரூபமலைக் காட்சியில் **இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்** என்று தேவன் சொன்னார் (மத்தேயு 17:5). இன்னுமாக, யோவான் 1:17 –ல், அப்போஸ்தலனாகிய யோவான் **நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின** என்று சொல்லுகிறார். யாக்கோபு 1:25–ல் கிறிஸ்துவின் பிரமாணத்தைச் சுயதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம் என்றழைக்கிறார் அதன் ஆசிரியர். ✝

# உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல

Sis. **ரேச்சல் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு ஸ்தோத்திரங்களும், வாழ்த்துக்களும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏசாயா 55: 8-11) வனப்பகுதியில் நம் தலைப்பு அமைந்துள்ளது. தேவன் சொல்கிறார், என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகள் அல்ல வென்று, பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது என்று வாசிக்கிறோம். இது தேவன், சொல்கிறார். அருமையானவர்களே, நாம் நினைப்பது போல தேவன் நினைப்பதில்லை. தேவனுடைய வர்த்தையைக் கொண்டு நம் மனதை மாற்றிக் கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர நம் விருப்பப்படி செய்யப் பழகக் கூடாது. ஏனென்றால் (சங்: 139: 1-6)ன் படி அவர் சகலத்தையும் அறிந்தவராயிருக்கிறார். ஆதி 17:1)ல் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். )சங் 137, எரேமியா 23: 23,24-ல் எங்கும் இருக்கிறார் அவர் என்று பார்க்கிறோம்.

தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல என்பதற்கு வேதாகமத்தில் சில உதாரணங்களைப் பார்க்கலாம் ,100 வயதான ஓர் ஆணும், 90 வயதான பெண்ணும் குழந்தை பெற்றுக் கொண்டார்கள். அவர்தான் ஈசாக்கு (ஆதி 17:17) ஓர் கன்னிகை தேவ குமாரனை பெற்றெடுத்தாள் - அவர் இயேசுகிறிஸ்து (மத்தேயு 1:18, 1 லூக்கா 1:35). நாகமான் (2 இராஜா: 5.9-13)

ஏழு முறை ஒரு குறிப்பட்ட ஆற்றில் மூழ்கி குஷ்டரோகத்திலிருந்து சுகமடைந்தான். ஞானஸ்நானம், தண்ணீரில் மூழ்கி மறுபடியும் பிறப்பது (யோவன் 3:5 ; ரோமர் 6:4) போன்ற காரியங்கள் தேவனுடையை வழிகள் ஆகும். மேலும் இயேசுவின் மூலமாக ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுதல் அவருடைய மரணம், உயர்ந்தெழுதல் போன்றவைகள், நமக்கு புரியாதவைகளாகவும், அறிவுக்கு எட்டாததுமாயிருக்கிறது.

இயேசுவின் ஊழிய நாட்களில் அங்கிருந்த யூதர்கள் இயேசு பூமியிலே ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்று நம்பினார்கள். ஏன்? அவரோடிருந்த சீஷர்களே பூமிக்குரிய ராஜ்ஜியம் பற்றிதான் பேசினார்கள், சிந்திந்தார்கள். (அப்:1:6,7) ஆனால் இயேசு பூமிக்குரிய ராஜ்ஜியம் பற்றி ஒருபோதும் பேசினதில்லை. இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்ஜியம் இவ்வுலகத் திற்குரியதல்ல, என் ராஜ்ஜியம் இவ்உலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்ககள்; இப்படியிருக்க என் ராஜ்ஜியம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்'' (யோவான் 18:36)

அநேக சமயம் நாமும் கூட நம் விருப்பம், நமக்கு பிடிப்பதுதான் தேவனுடைய வழி என்று நம்பியும் விடுகிறோம். ஏமாந்தும் போகிறோம். தேவனுடைய வழியை விட்டு, நம் விருப்பம் போல் செய்தால் எல்லாவற்றையும் இழந்து தவிக்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

முக்கியமான காரியம் என்னவெனில், நமக்கு புரிகிறதோ, இல்லையோ, ஏன்? என்று கேள்வி எழும்பினாலும் பரவாயில்லை தேவன் சொல்கிறதை நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அருமையானவர்களே! மனிதர்கள் தங்களுக்கு எது சரி என்றுபடுகிறதோ அதை நிலை நிறுத்தி பிறரையும் அதற்கு ஆம்'' போடச் சொல்கிறார்கள். அது இன்றைய மத உலகிலே மிகவும் பொதுவான, அனைவரும் தலையாட்டி ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகிவிட்டது. உதாரணமாத் தேவனைத் துதித்து பாடும்போது கம்பி, தோல் போன்ற இசைக் கருவிகளை பயன்படுத்தி கேட்கவும் நன்றாக இருக்கும், இன்றும் ஆவிக் குரிய உற்சாகத்தை கொடுக்கும் என்று சொல்லி பயன் படுத்து கிறார்கள். ஆனால் வேதம் சொல்கிறது, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி ''(எபேசி 5.19) பர்ப்பதற்கு மிகவும் எளிமையாகத் தெரிகிறது . ஏன்? தேவன் இப்படித்தான் பாடவேண்டும் என்று குறிப்பாக எதையும் சொல்லவில்லை. ஆனால் எப்படி தொழவேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே? (யோவான்: 4 : 23, 24) இருதயத்திலிருந்து தொழ வேண்டும் தேவனுடைய வழியாய் இருக்கிறது.

மனிதர்களாகிய நம்முடைய வழி எழுந்து நின்று எல்லோர் முன்னிலையிலும் பெண்கள் பேசலாம், பிரசங்கிக்கலாம், யாருக்கும்

போதிக்கலாம் என்பது. தேவன் சொல்கிறர், (1 தீமோ 2:12)-ல் போதிக்கவோ புருஷன் மேல் அதிகாரம் பண்ணவோ தேவன் உத்தரவு, கொடுக்கவில்லை. அவள்அமைதியாயிருக்க வேண்டும். மேலும் 1 கொரி: 14:34-ல் சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்க கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். என்று தேவனுடைய வழி சொல்கிறது அல்லது தேவன் சொல்கிறார்.

ஆக, நம்முடைய வழிகள் தேவனுடைய வழிகள் அல்ல. அது வேறு விதமானது, எளிமையாது. ஆனால், அதுதான் உண்மையானது.

எரேமியா தீர்க்கன் சொல்லும்போது, கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன் (எரேமியா:10:23) என்று கூறுகிறார். நாம் நினைப்பது தான் சரி, நாம் தீர்மானிப்பதுதான் சரி என்றும் வேறு ஒருவர் நபர் அது யாராக இருந்தாலும் அது நியாயமாகத்தான் இருக்கும் என்று எண்ணி ஏமாந்து போகாமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் இரண்டு முறை ஆண்டவருடைய வழி செம்மையாயிருக்கவில்லை என்றார்கள். அதற்கு தேவன் பதிலாக உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாத தாயிருக்கிறது என்று கூறுகிறார் (எசே 18:25,29). நம்மில் பலர் இன்றும் நாம் செய்வதையெல்லாம் செய்துவிட்டு. தேவனையே குற்றப்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

ஓசியா 14:9-ஐ வாசிக்கும்போது, இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தி யுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையான வைகள்; நீதிமான்கள் அவைகளில் நடப்பர்கள்; பாதகரோ வென்றால். அவைகளில் இடறி விழுவார்கள்.

நாம் எந்த வழியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? 1யோவான் 4:6-ல் ஒரு எச்சரிப்பு நமக்காக இருக்கிறது. நாங்கள் தேவனால் உண்டானவர்கள். சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும். அறிந்திருக்கிறோம் .

பிரியமான சகோதரிகளே! சமாதானத்தை விரும்பும் நாம் சத்திய ஆவி எது என்று பார்த்து அதற்கு கீழ்ப்படிவோம் அப்பொழுது பிழைப்போம்!! ஆமென்!!

✝

வாலிபர் பகுதி

# பொய் பக்தி வேண்டாம்.

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர் சகோதரர்களே, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் உயிரோடு எழுந்த அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்திலே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். 19–ம் சங்கீதத்தை நாம் வாசிக்கும் பொழுது **கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாய் இருக்கிறது** என்றும் அவைகளால் நாம் எச்சரிக்கப்படுகிறோம் என்றும் வாசிக்க முடியும். 11–ம் வசனத்திலே ''அவைகளைக் கைக்கொள்ளு கிறதினால் மிகுந்த பலன் உண்டு'' என்று வேதம் கூறுகிறது. ஆம், நாம் விசுவாசத்திலே வளரவும், நம்பிக்கையில் உறுதியாக' இருக்கவும் நாம் தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கவும், தியானிக்கவும் வேண்டும்.

நியாயாதிபதிகள் புத்தகம், 17 வது அதிகாரத்தில், மீகா என்ற ஒரு நபரை குறித்த நாம் வாசிக்கமுடியும். இந்த மனிதன் எப்பிராயீம் மலை தேசத்தானாக இருந்தான். 17:13 இல், அப்பொழுது மீகா: **எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான்.** இந்த வசனத்தை வாசிக்கும் பொழுது, தேவனை நம்பி, அவருடைய பிரமாணங்களை கைக்கொண்டு, அவரிடத்திலே ஆசீர்வாதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நபரைப் போல தெரிகிறது. தேவன் எனக்கு நன்மை செய்வார் என்ற எண்ணம் இந்த மனிதனுக்கு இருந்ததாக நாம் காணமுடியும். ஆனால், நடந்தது என்ன என்பதை நாம் கவனித்துப் பார்த்தால், நாம் இவரைப்போல இருக்கக்கூடாது என்பதை தெரிந்து கொள்ளமுடியும். ஏன் என்பதை தொடர்ந்து படித்துத் தெரிந்து கொள்வோம்.

நியாயாதிபதிகள் புத்தகத்தை வாசிக்கும் பொழுது பலமுறை இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய சொல்லை மீறி, அவருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்து அதன் விளைவாக பல தேசங்களுக்கு அடிமைகளாகப் போனார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும். நியாயாதிபதிகள் 2:10 இல், தேவனை அறியாத வேறொரு சந்ததி எழுந்து என்று நாம் வாசிக்கிறோம். அதன் விளைவாக, அவர்கள் பலமுறை அடிமைத்தனத்திற்கு தேவனாலே

விற்கப்பட்டார்கள். இன்றைய காலகட்டத்தில், தேவனுக்கு பயப்படுகிற ஒரு சந்ததியை எழுப்புவதன் முக்கியத்துவத்தை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளமுடியும்.

17ஆம், அதிகாரத்தை நாம் கவனிப்போம். மீகா என்ற மனிதன், தன்னுடைய தாயிடமிருந்து 1100 வெள்ளி காசுகளை திருடிக் கொண்டான். இது அந்த தாய்க்கு தெரியவில்லை. அந்தத் தாய், திருடப்பட்டது அறிந்து, திருடியவனை சபித்தாள். இந்த சாபங்களை கேட்ட மீகா, திருடியது நான்தான் என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். மீகாவின் தாய், அந்த 1100 வெள்ளி காசை வைத்து ஒரு சொரூபத்தையும், விக்கிரகத்தையும் உண்டுபண்ண அதைத் தன் மகனிடமே திருப்பிக் கொடுத்தாள்.

மூன்றாம் வசனத்தில், இதை முற்றிலுமாக கர்த்தருக்கென்று நியமித்தேன் என்று அந்த தாய் கூறுவதை வாசிக்கமுடியும். தேவனை அறியாத ஒரு சந்ததி எழும்பும் பட்சத்தில், இப்படிப்பட்ட காரியங்கள் நடந்து தான் ஆகும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு சீனாய் மலையிலே தேவன் கொடுத்த பத்து கட்டளைகளில் பிரதானமானது, **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்** என்பது. ''மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்'' என்று தம்முடைய தாசனாகிய மோசேயின் மூலமாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கட்டளையிட்டிருந்தார். தேவன் விரும்பாத விக்கிரகங்களையும், சொரூபங்களையும் செய்ததோடு மட்டுமல்லாமல், அதை கர்த்தருக்கென்று நியமித்தேன் என்றும் சொல்கிறாள். என்ன கொடுமை இது?

பிரியமானவர்களே! நாம் இப்படி இருக்கக் கூடாது . தேவன் விரும்பாத ஒரு காரியத்தை செய்துவிட்டு அதை தேவனுக்காக செய்கிறேன் என்று சொல்லி, அந்தச் செயலை நியாயப்படுத்தக் கூடாது. எவ்வளவுதான் நியாயப்படுத்தினாலும் அது தேவன் விரும்பாத ஒரு செயல். அதிலே தேவன் பிரியப்படமாட்டார். ஒருவேளை நமக்கு நாமே சமாதானம் தேடிக்கொள்ளும் விதமாக, அதை நான் தேவனுக்காக செய்தேன் என்று சொல்லிக்

கொள்ளலாம். ஆனால், உண்மையில் அதனால் எந்த பிரயோஜனம் இல்லை.

ஒரு பாவம் இன்னொரு பாவத்திற்கு வழிவகுக்கும் என்ற சொல்லுக்கேற்ப, ஐந்தாம் வசனத்திலேயே மீகா, அந்த விக்கிரகத்திற்கு ஒரு அறைவீட்டை நியமித்து, அவன் ஒரு ஏபோத்தையும், சுரூபங்களையும் உண்டுபண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டை பண்ணினான்; தன்னுடைய குமாரரில் ஒருவனை ஆசாரியன் ஆக்கினான். தேவனுடைய வார்த்தைகளை அரைகுறையாக தெரிந்துகொண்டு, அதனடிப்படையில் காரியங்களைச் செய்தான். தன்னுடைய பெற்றோர் மூலமாக தேவனுடைய கூடாரத்தில் ஏபோத் இருக்கும், ஓர் ஆசாரியன் இருப்பான் என்று அவன் அரை குறையாக கேள்விப்பட்டு இருப்பான். ஆனால், யார் ஆசாரியனாக இருக்க வேண்டும். ஏபோத்தை யார் அணிய வேண்டும், தேவனுடைய கூடாரத்தின் உடை அளவுகள் எப்படி இருக்க வேண்டும் என்ற முழுமையான அறிவு இல்லாமல், இவன் தேவனைப் பிரியப்படுத்த முயற்சி செய்கிறான்.

6 ம் வசனத்திலே ''அவனவன் தன் பார்வைக்கு சரி போன படி செய்து வந்தான்'' என்று வாசிக்கிறோம். இதிலே ஆர்ச்சரியம் என்னவென்று பார்க்கும் பொழுது, அப்படிச் செய்தவர்கள் நான் தேவனுக்காக செய்கிறேன் என்று நினைத் தார்கள். அதைவிட முக்கியமாக தேவன் இதிலே பிரியப்படுவார் என்றும் அதன் மூலமாக ஆசீர்வாதங்கள் வந்து சேரும் என்றும் நம்பினார்கள். தொடர்ந்து என்ன நடந்தது என்று நாம் வாசிக்கும் பொழுது 10-ம் வசனத்திலே மீகா, ஒரு லேவியன் ஆன வாலிபனை கண்டு, அவனை ஆசாரியனாக இருக்கும்படி நியமித்தான். 12-ம் வசனத்திலே, மீகா, அந்த லேவி கோத்திரத்து வாலிபனை பிரதிஷ்டை பண்ணினான். தேவனுடைய நாமத்தினாலே பிரதிஷ்டை செய்யாமல், தன்னுடைய விருப்பத்தின்படி தன்னுடைய அதிகாரத்தினால் அதைச் செய்தான்.

இவை அனைத்திற்கும் பிறகு நாம் முதலில் வாசித்த 13- ம் வசனத்தின் வார்த்தைகள் அவனால் சொல்லப்படுகிறது. ''அப்பொழுது மீகா: எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் நன்மைசெய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான். ''எப்படி நன்மை கிடைக்கும்? எப்படி தேவன் ஆசீர்வதிப்பார்? நாம் நம்முடைய

மனதின் விருப்பத்தின்படி எல்லாம் செய்து, அதை தேவனுக்காக செய்கிறேன் என்று சொன்னால் மட்டும் அது தேவனால் அங்கீகரிக்கப்பட்டு விடுமா? பிரியமானவர்களே, நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டிய ஒரு கேள்வி'' **நான் மீகாவைப் போல இருக்கிறேனா?**

களவு செய்யாதிருப்பாயாக என்ற கற்பனையை மீறினான். தன்னுடைய தாயின் இடமிருந்து வெள்ளிக் காசுகளை திருடினான். அவன் தாயோ விக்கிரகங்களை செய்து, கற்பனையை மீறினாள். தேவனுடைய ஆசாரியனுடைய உடையை உண்டு பண்ணினான். லேவியன் அல்லாத தன்னுடைய குமாரனை ஆசாரியன் ஆக்கினான். பின், லேவியன் ஆன ஒரு வாலிபனை, தன்னுடைய அதிகாரத்தினால் பிரதிஷ்டை செய்தான். இப்படி ஆரம்பம் தொட்டு அனைத்து காரியத்திலும் தேவனுடைய கற்பனையை மீறி, காரியங்களை செய்து முடித்தபின், தேவன் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று கூறுகிறான். நிச்சயம் அவன் எதிர்பார்த்திருந்த நன்மை கிடைத்திருக்காது. தேவன் எனக்குத் தருவார் என்ற அவனுடைய நம்பிக்கை, தவறானது.

பல நேரங்களில் நாம் இப்படித்தான் யோசிக்கிறோம். தேவனுடைய கற்பனைகளை மீறி, தேவன் விரும்பாத செயல்களை செய்துவிட்டு, தேவன் என்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அது தவறு. அது தவறு. சாவேல் 15 ஆம் அதிகாரம் 22 ஆம் வசனத்தில் வாசிக்கிறது போல, ''பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கிடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்''.

எனவே பிரியமானவர்களே, நம்முடைய கீழ்ப்படிதலும், செவிகொடுத்தலும் மட்டுமே நமக்கு ஆசீர்வாதத்தை பெற்றுத்தரும். நம்முடைய மனதிற்கு பிரியமான காரியங்களை செய்து, தேவன் என்னை ஆசீர்வதிக்கவேண்டும் என்று நாம் நினைத்தால், நாம் மீகா போல நம்மால் பெற்றுக்கொள்ள முடியாத நன்மைகளுக்காக காத்திருந்து பெறாமல் போவோம். அப்படியில்லாமல், நாம் தேவனை முழுமையாக புரிந்துகொண்டு, அவருடைய வசனங்களை முழுமையாகத் தெரிந்துகொண்டு அதனடிப்படையில் நம்முடைய அன்றாட வாழ்வை நடத்துவோம். தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதங்களை நிச்சயம் பெற்றுக்கொள்வோம். தேவனுடைய உதவியோடு நாம் அப்படி வாழ்வதற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம். ஆமென்!

✝

சிறுவர் பகுதி

# தேவன் வெறுக்கிறார்

**Dr. பிரெய்ஸி**

**ஹா**ய் குட்டீஸ், நீங்களெல்லாரும் நலமாயிருப்பீர்களென்றும் வருகிற பரீட்சைக்காக தயாராவதில் பரபரப்பாயிருப்பீர்களென்றும் நம்புகிறோம். நாங்கள் உங்கள் எல்லோருக்காகவும் ஜெபிக்கிறோம். இம்மாதம் தேவன் வெறுக்கிற சில காரியங்களைக் குறித்து நாம் பார்ப்போம்.

பிரியமான பிள்ளைகளே, நம் தேவன் அன்புள்ள தேவனாயிருந்து, நம் பெலவீனங்களின் மத்தியிலும் நம்மை நேசிக்கிறார். நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தை செய்யும்போது அவர் நம்மில் அன்பு செலுத்துகிறார். அவர் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார், ஏங்குகிறார். ஆனால் நம் அன்புள்ள தேவன் நாம் அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் போது, அவரிடம் திரும்பத்தவறும்போது நம்மை வெறுக்கிறார்.

(நீதிமொழிகள் 6: 16–19), (ஏசாயா 1 :13–14) மற்றும் (சகரியா 8:17) ஆகிய வசனங்களில் தேவன் பல காரியங்களை வெறுக்கிறார். தயவாக நீங்கள் அந்த வசனங்களையெல்லாம் வாசித்து நீங்கள் தேவனால் நேசிக்கப்படப்போகிறீர்கள் என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள். அருமையான பிள்ளைகளே, நீங்கள் தாழ்மையாய் இருந்து, ஒருவருக்கொருவர் உதவி செய்து உங்கள் அயலகத்தாருக்கு எதிராக எந்த தீங்கையும் எண்ணாதிருங்கள் . சர்வவல்ல தேவன் அவருடைய வார்த்தை மூலமாக அவரைப்போலிருக்க வழிநடத்துவாராக, தொடர்ச்சியாக வேதாகமத்தை வாசியுங்கள்.

உங்கள் அன்புள்ள
பிரெய்ஸி அக்கா

✝

## வினாக்கள்

1.நீதிமொழிகள் 6ஆம் அதிகாரத்தில் தேவன் எதை எதிர்க்கிறார் ?

2.நம் நண்பர்களோடு நாம் எப்படி இருக்க வேண்டும் ?

3.ஓர் எறும்பு உணவுக்காக என்ன செய்கிறது ?

4.ஒரு துன்மார்க்கன் எப்படி நடந்து கொள்கிறான் ?.

5.நம் பெற்றோரின் வார்த்தைகளை நாம் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் ?

---

## நாளும் நடப்பும்

1. இந்த ஆண்டில் இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடுகளில் இந்தியா முதலிடம்.!

2. இங்கிலாந்து ராணி 2ம் எலிசபெத், கடந்த 8ம் தேதி தனது 96வது வயதில் இறந்தார்.

3. நாட்டின் சிறந்த உயிரியல் பூங்கா பட்டியலில், வண்டலூர் உயிரியல் பூங்கா 2வது இடத்தை பிடித்துள்ளது.

4. தமிழகம் முழுவதும் இன்ப்ளூயன்ஸா எனப்படும் ப்ளூ காய்ச்சல் பரவி வருகிறது.

5. டென்னிஸ் அரங்கின் ஜாம்பவான் ரோஜர் பெடரர் தனது ஓய்வை அறிவித்தார்.

# என் ஜனம்

## சகோ K.M பிலிப்-பவானி

**தி**ருமறை ஆசான் - நேயர்கள் யாவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இப்பூமியிலே மனித இனத்திற்கு மட்டுமே உறவுகள் உண்டு. உறவுகள் இல்லாத ஒரு வாழ்க்கையை நினைத்துக் கூட பார்க்க முடிவதில்லை. ஆதியிலே சகலத்தையும் பூரணமாய் படைத்த தேவன் அத்தோடு திருப்தியடையாமல், தன்னோடு உறவு கொள்ளதக்க வகையில் தான் மனிதனாகிய ஆதாமைப் படைத்தார். அந்த ஆதாம் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்றும் அவன் உறவு கொள்ளும்படியாய் ஒரு ஏவாளைப் படைத்தார். என்று பார்க்கிறோம். இப்படிப் படைத்த மனிதர்களோடு உறவை பலப்படுத்த தேவன் பகலில் குளிர்ச்சியான வேளையில் ஏதேன் தோட்டத்திற்கு அவர்களைத்தேடி வந்தார் [ஆதி 3:8]. ஆம், தேவன் எப்பொழுதுமே மனித இனத்தில் தனக்கென்று ஒரு கூட்டத்தை தன் ஜனமாகவே நேசித்து வருகிறார். எகிப்திலிருக்கிற ஜனத்தின் என உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன்... அவர்கள் கூக்குரலைக் கேட்டேன். அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு [யாத் 3:7:8:1] என்று தன் ஜனமாகிய இஸ்ரவேலை பறந்து காக்கிற பட்சியைப் போல பாதுகாத்து வழி நடத்தி வந்தார். தேவன் மனித இனத்தை படைத்த நோக்கமே, தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும் படியாகத்தானே என்றும் [மல் 2:15] இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள் [ஏசா 43:21] என்றும் தன் ஜனத்தைக்குறித்து தேவன் அக்கறையோடும் அன்போடும் நடத்திவந்தார்.

அன்பானவர்களே! நாம் கூட தேவ ஜனம் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் [1பே2:9]. ஆகவே, மேற்கண்ட அனைத்து ஆசீர்வாதங்களும் நமக்கும் உரியதேயாகும்.

[இராஜா 6:8-23] முடிய உள்ள சரித்திரத்தில் தேவன் தன் ஜனத்தை எவ்வளவாய் பாதுகாக்கிறார் என்பதை கவனிப்போம். என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாச ஸ்தலங்களிலும் அமைதியாய் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்'' [ஏசா 32:18]. இந்த உண்மையைத்தான் இந்த சரித்திரத்தில் பார்க்கப் போகிறோம். தேவ ஜனமாகிய இஸ்ரவேல் தேசத்து மக்களை சிறைப் பிடிக்கும்படியாய் சீரிய தேசத்து ராஜா பலமுறை ரகசியமாகத் திட்டமிட்டு படையெடுக்கிறான். ஆனால், ஒவ்வொரு முறையும் அவன் திட்டங்கள் தோல்வியை தழுவின. இஸ்ரவேலர்கள் ஒரு சேதமின்றி காக்கப்பட்டனர். காரணம் சீரிய தேசத்து இரகசிய அறையில் விரோதிகள் போடும் திட்டங்கள் எல்லாவற்றையும் தேவன்

தன் தாசன் எலிசாவுக்கு வெளிப்படுத்த இத்தேவ எச்சரிப்பை எலிசாவின் மூலம் இஸ்ரவேல் ராஜாவும் மக்களும் கேள்விப்பட்டு ஏற்றுகொண்டு எச்சரிக்கையாயிருந்து தன்னையும், தன் தேசத்தையும் காத்துக் கொண்டார்கள். ஆம், இஸ்ரவேலின் தேவன் தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை. அவருடைய கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை (சங் 11:4; 121:4), கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்திரத்தை கைவிடாமலும் இருப்பார் (சங் 94:14). அவர்தன் ஜனத்தை ஒருபோதும் கைவிடமாட்டார். எதிரியின் உள்ளத்தில் இரகசியமாக எழும்பிய திட்டத்தை தேவன் அறிந்து தன் ஜனத்தை எச்சரித்தார். அன்பானவர்களே! அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயும் இருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (எபி 4:13) இதை வாசித்து பயப்படவேண்டாம். அதற்கு பதிலாக தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும். என்னை சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும் (சங் 139:23,24) என்று நம்மை தாழ்த்தி ஒப்புக்கொடுப்போம். நாம் ஆராதிக்கிற தேவன், தன் ஜனம் வெட்கப்பட்டுப் போகும்படி விடவே மாட்டார் (யோவேல் 2:27).

இந்த சரித்திரத்தில் தேவ ஜனம் செய்த ஒரு உன்னதமான காரியம்,தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்தபோது இவர்கள் அதன்படி எச்சரிக்கையாயிருந்து தங்களைக் காத்துக் கொண்டார்கள்

என்பதேயாகும். தேவ ஆலோசனைகள் அடங்கிய வேதத்தின் வார்த்தைகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அசட்டைத்தனம் கூடவேகூடாது. தேவன் எச்சரிக்கிறார். ''நான் உங்களுக்கு கற்பிக்கிற வசனத்தோட நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், ஒன்றையும் குறைக்கவும் வேண்டாம்'' (உபா 4:2 வெளி 22:18,19). ஆவியானவர் கூட, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று கற்றுக் கொடுக்கிறார் (1கோ 4:6). இயேசு, ''உள்ளதை உள்ளதென்றும். இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்'' என்று வழி காட்டுகிறார் (மத் 5:37). இப்படி சத்தியத்தின் வழியில் நாம் நடக்கும் பொழுது நித்தியத்தை ஒரு போதும் இழக்க மாட்டோம். பூமியிலும் பயமற்ற சமாதான வாழ்க்கை வாழ தேவன் காப்பார்.

இங்கே இஸ்ரவேல் மக்கள் எதிரிகளை எதிர்த்துப் போரிடவில்லை. மாறாக தேவனுடைய மனுஷன் எலிசா சொன்ன வார்த்தையின் படி செய்து தங்களைக் காத்துக் கொண்டார்கள். நாம் கூட வேத வசனத்தின்படி கற்பனைகளைக் கைக்கொண்டு, பிசாசுக்கு எதிர்த்து நின்றால் போதும் அவன் நம்மைவிட்டு ஓடிப் போவான். (யாக் 4:7). நம்முடைய உறவு எப்பொழுதும் தேவனோடு இருக்கவேண்டும்.

வேதம் வாசிப்பதின் மூலம் தேவன் நம்மோடு பேசவும், ஜெபத்தின் மூலம் தேவனோடு பேசவும்,சபை கூடி வருவதன் மூலம் சகல தேவ ஜனத்தோடு ஐக்கியப்படவும் இப்படியாக சாத்தனையும் அவன் கூட்டத்தையும் ஒதுக்கி விட்டு தேவனோடு உறவை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுது ''நீ நடக்கும்போது அது உனக்கு வழிகாட்டும், நீ படுக்கும் போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும்போது அது உன்னோடே சம்பாஷிக்கும்;'' (நீதி 6 :22,23). இவ்விதமாய் தேவ ஜனமாகிய நாம் சமாதானமாய் வாழ முடியும்.

மேலும், சீரிய ராஜா பலமுறை தோல்விகண்டதால் மூர்க்கவெறி கொண்டு எலிசாவைப் பிடித்துவர இரவோடு இரவாக ராணுவத்தை அனுப்புகிறான். இராணுவம் எலிசா தங்கியிருந்த மலையைச் சுற்றிலும் வளைந்து கொண்டார்கள். விடியற்காலையில் வெளியே வந்த எலிசாவின் வேலைக்காரன் இராணுவத்தை பார்த்து பயந்து நடுங்கி, ''ஐயோ என்ன செய்வோம் என்று எலிசாவிடம் கதறுகிறான். ஆனால் தேவவல்லமையை நன்கு உணர்ந்த எலிசவோ அவனை பயப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டு, தன கண்களை மூடி தேவனை நோக்கி, **இவன் கண்களை திறந்தருளும்** என்று ஜெபிக்கிறான். இப்பொழுது தேவன் வேலைக்காரனின் ஆவிக்குரிய கண்களைத் திறக்கிறார்''.இதோ எலிசாவைச் சுற்றிலும் அக்கினி மயமான குதிரைகளாலும், இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதைக் கண்டான். ஆம், எதிரிகளோடு இருப்பவர்களைக் காட்டிலும், தேவ பிள்ளைகளோடு இருப்பவர்கள் அதிகம் என்பதை நன்கு உணரவேண்டும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும் பகலில் பறக்கும் அம்புக்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்'' (சங் 91:5,6) என்பது எவ்வளவு உண்மை என்று பாருங்கள். அன்பான தேவ ஜனமே! இந்தப் பரந்த உலகில் அநேகர் பயத்தோடும், கலக்கத்தோடும், இனி என்ன செய்வோம் என்று அறியாமல் திகைத்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு வேதத்தை அறியவும்மெய்யான சபையை கண்டுகொள்ளவும், அவர்களும் பயம் நீங்கி, சமதானத்தின் சந்தோஷத்தில் தேவ ஜனமாக வாழ, நாம் நம்மடைய கண்களை மூடி ஜெபிப்பது மிக மிக அவசியாமான ஒன்றாகும். ''தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்'' என்பதை சுட்டிக் காட்டுவோம் (புல 3:25).

அன்பான தேவ ஜனமே! அன்று (1 சா) 17 ல்) தேவ ஜனமாகிய இஸ்ரவேல் இராணுவம், எதிரி கோலியாத் தைக்கண்டு பயந்து நடுங்கி ஒன்றும் செய்ய இயலாத நிலையில் 40நாட்களை பயத்தோடே கழித்தார்கள். ஆனால் எதிரி கோலியாத்தோ40 நாட்களும் தன்னை எதிர்க்க சவால் விட்டதோடு, தேவனுடைய இஸ்ரவேலின் சேனையை நிந்தித்தான், அவமானப்படுத்தினான். அப்படியென்றால், இதன் உண்மை நிலை

என்ன? கோலியாத் இஸ்ரவேல் சேனைகளை அல்ல' இஸ்ரவேலின் தேவனை நிந்தித்தான் என்பதே உண்மை. இந்த உணர்வுதான் தாவீதைத்தட்டி எழுப்பி வெற்றியைக் கொடுத்தது. பிரியமானவர்களே! தேவஜனமாகிய நம்முடைய வாழ்க்கை, தேவனற்றவர்கள் தூசிக்கும்படியாய் வீணிலே வழங்கும்படியாய், வெட்கப்படும்படியாய் ஒருபோதும் இருக்கக்கூடாது. ஏனெனில், வேதம் நம்மை எச்சரிக்கிறது. ''உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கிறது. உங்களுக்குநச் செவிசகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசா 59:2). இவ்வாறு தேவனுடைய உறவை விட்டுவிடவேண்டிய சூழ்நிலை உண்டு என்பதையும் தெளிவுபடுத்துகிறது. மாறாக, இவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள், இவர்கள் கிறிஸ்தவர்கள் (அப்4:13,11:26) என்று பாராட்டக்கூடிய, அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படும் வாழ்க்கை வாழ வேண்டும். நம் விசுவாசத்தை கனவீனப் படுத்துகிறபடியான பாவங்களை முற்றிலும் அகற்றிப்போட்டு நம் வாழ்க்கையின் மூலம் ''தேவன் ஒருவர் உண்டு'' (1சா 17:16) என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளும்படி பாவமற்ற தைரியமான வாழ்க்கை வாழ்ந்து காட்ட வேண்டும். கிறிஸ்துவின் சபையாரை – இவர்கள் தேவ ஜனம் என்று மக்கள் பாராட்ட வேண்டும். இந்த உணர்வோடு வாழ்ந்தால் ''பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (செப் 3.20). கர்த்தரின் வாக்கு நம்மில் நிறைவேறட்டும்! ஆமென்!!

✝

---

## அவிசுவாசியை பார்த்து இயேசு கேட்கும் கேள்விகள்

1. *உங்கள் விசுவாசம் எங்கே? - லூக்கா 8:25*
2. *ஏன் பயப்பட்டீர்கள் - மத் 8:26*
3. *அவிசுவாசியாயிராமல் விசுவாசியாய் இரு யோவான் 20:27*
4. *அற்ப விசுவாசியே - மத் 16:8*
5. *விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே மத் 17:17*

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

**சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ்ராஜகுமார், சென்னை**

மனிதன், தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் படைக்கப்பட்டிருக்கிறான் என்கிறபோது, மனிதனின் சரீர சாயலின்படியும், ரூபமாகவும் தேவன் இருப்பார் என்று மனிதர்கள் எண்ணுகிறார்கள். இதன் காரணமாக கடவுள்களை மனித சரீர உருவத்தில் உண்டாக்குகிறார்கள், அதை வணங்குகிறார்கள். மனிதர்கள் இயேசுவையும் இப்படி எண்ணக்கூடாது என் பதற்காக அவருடைய சரீர சாயலை தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தவில்னல. ஆனாலும், மனிதர்கள் விக்கிரக ஆராதனனனய விரும்பினதால் இயேசுவையும் விக்கிரகமாக்கி வழிபடுகிறார்கள். ஆனால், இது தேவனுக்குப் பிரியமானதல்ல. ஆகையால், தேவ சாயல், ரூபம் என்ன என்பதைக் குறித்து இந்த பாடத்தில் கவனிக்கலாம்.

**பின்பு தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனன உண்டாக்குவோமாக ... என்றார். ஆதி. 1 : 26. இந்த சாயல், ரூபம் மனிதர்களாகிய நம்முடைய கண் களுக்கு புலப்படாதவைகள் ஆகும்.**

**ஆக,மனிதர்களாகிய நாம் தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் படைக்கப் பட்டிருக்கிறோம். அப்படியென்றால், சாயல் மற்றும் ரூபம் என்பது என்ன?**

I. **ஆவி என்பது ஒரு ஆள் அல்லது ஒரு நபர் ஆகும்**:

தேவன் ஆவியாயிருக்கிறார், யோவா. 4 : 24. அவருக்கு நம்மைப்போல மாம்சத்திற்குரிய சரீரம் இல்லை. ஆனால், அவர் ஒரு நபராயிருக்கிறார்.

ஆக, ஆவி என்பது ஒரு ஆள் (Person) அல்லது ஒரு நபர் என்பதைக் குறிக்கிறது.

அதேபோல மனிதராகிய நாமும் உள்ளான மனிதனிலே ஆவியாயிருக்கிறோம் என்று வேதாகமம் கூறுகிறது . சகரியா 12 : 1 ல் ... வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் ... என்று எழுதப்பட்டுள்ளது.

பிரசங்கி 12 : 7 ல் ... 'ஆவி' தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும் ... என்று உடலைவிட்டு வெளியே செல்லும் உள்ளான மனிதனை ஆவி என்று வேதாகமம் கூறுகிறது.

தேவன் ஆவியாக, ஆள் அல்லது நபராக இருப்பதுபோல மனிதர்களாகிய நாம் உள்ளான மனிதனில் ஆவியாக ஒரு ஆள் அல்லது நபராக இருக்கிறோம்.

சரீரமும் அதற்குள் வாழுகிற உள்ளான மனிதனாகிய ஆவியும் சேர்ந்துதான் உலகத்தில் வாழுகிற மனிதர். சரீரமில்லாமல் வெறும் ஆவியோ அல்லது ஆவியில்லாமல் வெறும் சரீரமோ உலகத்தில் வாழ முடியாது. அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது ..., (யாக். 2 : 26).

இந்த ஆவியை உள்ளான மனிதன் என்று வேதம் சொல்லுகிறது. எங்கள் புறம்பான மனுஷனானது (சரீரம்) அழிந்தும், உள்ளான மனுஷனானது (ஆவி) நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது (2 கொரி. 4 : 16).

இந்த உள்ளான மனிதனாகிய ஆவி ஆத்துமாவையும், மனதையும், ஆவிக்குரிய இருதயத்தையும் கொண்டதாக இருக்கிறது. இந்த உள்ளான மனம், இருதயத்தை உள்ளம் என்றும் வேதம் வகைப்படுத்தி கூறுகிறது.

**2). அடுத்தது சாயலைப் பற்றி கவனிக்கலாம்:**

எபே. 4 : 23 – 24 ல் நீதி பரிசுத்தம் சாயலாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்த சாயல் இருதயத்தில் இருக்கிறது. நீதி பரிசுத்தம் மட்டுமல்ல ஆவிக்குரிய கனிகளான அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இரக்கம், தாழ்மை, போன்றவைகளும் இருயத்தில் இருந்தால், அது நல்ல சாயலாய் தேவனுடைய சாயலுக்கு ஏற்ற சாயலாய் இருக்கும், (கலா. 5 : 22 – 23; பிலி. 2 : 5 – 8). இப்படித் தான் தேவன் மனிதனை நல்ல சாயலோடு படைத்தார்.

**3). அடுத்தது ரூபத்தைப் பற்றி கவனிக்கலாம்:**

தேவனுக்கு ஆத்துமா (Soul) உண்டு. என்னுடைய ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன் என்று மத். 12 : 18 ல் பிதாவானவர் தம் குமாரர் இயேசுவை நோக்கிக் கூறுகிறார். (ஏசா. 42 : 1). அதேபோல மனிதனுக்கும் ஆத்துமா உண் டு (மத். 10 : 28).

ஆதி. 6 : 6 ல் தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கிதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்து. இந் வசனத்தின்படி தேவனுக்கு ஆவிக்குரிய மனசு (Mind), இருதயம் (Heart) உண் டு.
அதேபோல மனிதனுக்கும் ஆவிக்குரிய இருதயம் (Heart) மனசு (Mind) உண் டு [மத்.22 : 37].

ரோமர் 12 : 2 ல் பரிசுத்த ஆவியானவர், ... உங்கள் 'மனம்' புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்கிறார். இதில் மனம் என்பது ரூபமாயிருக்கிறது.

ஆக ரூபம் என்பது: ஆத்துமா, இருதயம், மனம் ஆகும். இதில் ஆத்துமா என்பது வாழ்வாகவும் (Life), இருதயம் (Heart) என்பது நமக்கு புத்தி தெரிந்த நாள் முதல் காண்கிறவைகள், கேட்கிறவைகள், பேசுகிறவைகள், கற்கிறவைகள், புரிந்துகொள்ளுகிறவைகள் அனைத்தும் இருதயத்தில் பதிவாகியிருக்கும் [சங். 33 : 15].

நல்லவைகளைக் கண்டு, கேட்டு, படித்து இருந்தால் இருதயதில் நல்லவைகள் இருக்கும், [லூக். 6 : 43 – 45]. கெட்டவைகளை கண்டு, கேட்டு, படித்து இருந்தால் கெட்டவைகள் இருதயதில் இருக்கும் [மாற். 7 : 20 – 23; எரே. 17 : 9].

ஆகையால், பிள்ளைகளை நல்ல சூழலில் வளர்க்க வேண்டியது அவசியமாகிறது. ஏனென்றால், ஒருவனுடைய இருதயம் அதிலுள்ள எண்ணங்களும் எப்படியிருக்கிறதோ அப்படியே அவனும் இருக்கிறான். [நீதி. 23 : 7].

அடுத்தது மனம் (Mind), [ரோமர் 7 : 14 – 25] சொல்லக்கூடிய கருத்து என்னவென்றால், மனம் எப்பொழுதுமே அல்லது பெரும்பாலும் நல்லதையே செய்ய நினைக்கிறது. ஆனால் இருதயம் கெட்டதாயிருக்கும் போது, அது மனதின் நல்ல முடிவையும் மாற்றி தீமையான செயலைச் செய்ய வழிநடத்துகிறது என்கிறார், பவுல் [ரோமர். 7 : 23].

ஆனால், கிறிஸ்துவின் ஆவியின் பிரமாணம் [புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் சுவிசேஷம்] பவுலை, பாவம் மரணம் என்பவைகளின் பிடியிலிருந்து விடுதலையாகிற்று என்கிறார், [ரோம. 8 : 2].

ஆக, தேவன் தம் ரூபத்தில் படைத்தார் என்றால் அவரைப்போல ஆவி, ஆத்துமா, இருதயம், மனசு உடையவர்களாகப் படைத்தார். உள்ளான மனிதனிலே ஆண் , பெண் இருவரும் சமமாயிருக்கிறோம். சரீரத்தில் மட்டும் ஆண் , பெண் என்கிற வித்தியாசம் உண்டு.

இவைகளைப் பார்க்கும் போது, தேவன் நம்மை நமது சாயல் ரூபத்தில் படைத்தார் என்பது பூமிக்குரிய சாயல் ரூபத்தைக் குறிக்கவில்லை. மாறாக, அவருடைய ஆவிக்குரிய சாயலையும், ரூபத்தையும் குறிக்கிறது. ஆண் , பெண் இருவருமே உள்ளான மனிதனில் தேவனுடைய சாயல், ரூபத்தில் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். ஆகையால், இரட்சிப்பில் ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. சரீரத்தில் அவரவர்களுக்கு உள்ள பொறுப்பை அவரவர்கள் நிறைவேற்றவேண்டும் [கலா. 3 : 28].

பரலோகத்திலே சரீரமில்லைன. ஆகையால், அங்கு ஆண் பெண் வித்தியாசமில்லை. ஆனால், ஆணாக அல்லது பெண்ணாக பூமியில் வாழ்ந்தோம் என்கிற நினைவு இருக்கும், [லூக். 20 : 35 – 36].

நாம் நம்மை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, அவருடைய இரத்தம் நம்முடைய மனசாட்சியை சுத்திகரிக்கிறது, [எபி. 9 : 14]. அதே நேரத்தில் தேவன் ஆவிக்குரிய விருத்தசேதனம் மூலமாக நம்முடைய இருதயத்தில் சுத்திகரிக்கிறார். நம் இருதயத்தில் நல்ல சாயல் உருவாகும் போது புதிய ஆவிக்குரிய மனிதன் உருவாக்கப் படுகிறான், [கொலோ. 2 : 11]. இப்படி நாம் புதிய மனிதனாக உள்ளான மனிதனில் பிறக்கமுடியும் [யோவா. 3 : 3 – 6]. ஆமென்.

✝

---

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன். எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்*

*-யோவான் 3:16*

# *கானான் தேசமும், கர்த்தருடைய சபையும்*

Bro.**பாண்டியன்**

பழைய ஏற்பாடு நமக்கும் போதனையாகவும், திருஷ்டாந்தர மாகவும் அதாவது, முன் மாதிரியாகவும் இருக்கிறது என்றார் பவுல். எகிப்தில் அடிமைகளாய் இருந்த தம் ஜனத்தை விடுதலையாக்கி கானான் தேசத்தில். தேவன் சேர்த்ததைப் போலவே, பாவத்தில் அடிமைகளாய் இருந்த நம்மை விடுதலையாக்கி தம்குமாரனின் ராஜ்ஜியத்தில் உட்படுத்தின. பிதாவை ஸ்தோத்தரிப்போம் (கொலொ 1:13) என்கிறது பூதியஏற்பாடு. முதாவது கானான் தேசத்தின் பெயர்க் காரணத்தைப் பார்க்கும்போது இது **நோவாவின்** மூன்று குமாரரில் ஒருவனான **காமின்** மகன் பெயர் **கானான்** என்பதாகும். ஜலப்பிரளயத்திற்கு பின் இவன் சந்ததியார் பெருகி வளர்ந்த தேசமே கானான் தேசம் ஆனது. (ஆதி 10:15-18). ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்ட போது அவன்தன் இனத்தாரை விட்டு வந்து **சேர்ந்த தேசமும்** இந்தக் கானான் தேசமே (அதி 12:5). இது நம் ஆண்டவர் சொன்ன ''என் நாமத்திநிமித்தம் தன் உரவுகளையும் பொருட்களையும் விட்டவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுகந்தரிப்பான் '' (மத் 19:24) என்ற வாக்குதத்திற்கு ஒப்பானது.

கானன் தேசத்தை ஆபிரகாமின் சந்ததியார் சுதந்ததிரிப்பார்கள் என முன்கூட்டியே தேவன் வாக்கு பண்ணியிருந்தார் (ஆதி 15:13-16) இன்னும் குறிப்பாக **கானான் தேசத்தை கொடுக்கவே தேவன் ஆபிரகாமை அழைத்தார்** என்பதும் ஒரு விசேஷமான காரியமாகுத் (ஆதி 15:7) இந்த விஷயத்தை ஸ்தேவான் தன் பிரசங்கத்தில் குறிப்பிட்டதை நாம் அறிவோம். பிற்பாடு என்பதும், ராஜ்ஜியமாகிய சபைக்கு உட்படுத்தினவர் பிதாவகிய தேவனே என்பதும் நாம் அறித்த விஷயமல்வா? கானான் தேசம் பற்றி அதே போன்ற கருத்துக்களைப் பார்ப்போமா? (உபா 7:1) **நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை பிரவேசிக்கப் பண்ணுகிறார்** என்றும் (யோசுவா 21:43)ல் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தைக் கொடுத்தார். அவர்கள் அவைகளிலே குடியிருந்தார்கள் என்றும் வாசக்கின்றோம்.

மேலும், (எரேமி 2:7) **செழிப்பான தேசத்தின் கனியையும் நன்மையையும் சாப்பிடும் பாடிக்கு நான் உங்களை அவ்விடத்துக்கு** (**கானான் தேசத்திற்கு**) அழைத்துக்கொண்டு வந்தேன். **ஆனாலும், நீங்கள் அதற்குள் பிரவேசித்த போது என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி என் சுதந்தரத்தை அருவருப் பாக்கினீர்கள் என்று பார்க்கிறோம்.** இவ்வசனப்பகுதியில் அழைத்துக்கொண்டுவந்தவர் தேவனே என்று குறிப் பிடுவதுப்போலவே இப்போது சபையில் இருப்பவர்களும் தேவனுடைய திர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்கள் (ரோமர் 8:28) என்றும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள் என்றும் (1கொரி1:2) வேதம் குறிப்பிடுகிறது மாத்திரமல்ல இங்கு கானான் தேசத்தை தேவன் குப்பிடும் போது **என் தேசம்** என்று சொல்வதைப் போல கிறிஸ்துவும் **என் சபையைக்** கட்டுவேன் என்று சொன்னது கவனிக்கத்தக்கது. அவர்கள் தேசத்தைத் தீட்டுப்படுத்திய போல சபையிலும் நடக்கும் ஆபத்தை கவனிப்போம்.

இஸ்ரவேலர் கானானை, **சுதந்தரித்தது** போலவே நாமும் சபையில் இருக்கிறோம். அநியாயக்காரர் தோவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை (1 கொரி 6:9) என்றும், அழியாததும், மாசற்றதும், வாடததுமாகிய சுதந்திரத்திற்கு ஏதுவாக, நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார். (1 பேதுரு 1:4) என்றும் சுதந்தரிப்பதைப் பற்றி வாசிக்கின்றோம். ஜனம் கானானில் குடியேரின உடனே யோசுவா ஒரு முக்கிய எச்சரிப்பைத் தந்தார். தேவனுடைய உடன்படிக்கையை மீறி அந்நிய தேவர்களை பணிந்தால் உங்களுக்கும் கொடுத்த நல்ல தேசத்திலருந்து நிங்கள் சீக்கரமாய் அழிந்து போவீர்கள் (யோசு 23:15, 16) என எச்சரித்தார். அப்படி போல நமது பல பிரச்சனைகளுக்கு பொதுவாக நம்முடைய மிறுதலே காரணமாய் இருப்பதை உணர்ந்து நாமும் மணந்திரும்ப வேண்டும். இருதாத்திலிருந்துப் புறப்படுகிறதே மனுஷனை திட்டுப்படுத்தும் என்று நமதான்டவர் எச்சரித்தார். மேலும், எபோ 5:5 ல் விபச்சாரக்காரணாவது, விக்கிரக ஆராதனைக் காரணாகிய பொருளாசைக் காரணாவது, கிறிஸ்துவிக் ராஜ்ஜியத்திலே சுதந்திரமடைவதில்லை என்று அப்– உபதேசம் எச்சரிக்கின்றது.

மேலும் (எபி 12:15)ல் தேவ கிருபையை இழந்து போகாதபடிக்கு யாதோரு கசப்பான வேர் முளைத் தெழும்பிக் கலக்கம் உண்டாக்கிறதினால் அநேகர் தீட்டுபடாதபடிக்கு என்று கண்கிறோம்.

இதன் இணை வசனமாக (உபா 29:18)ல் அந்நிய தேவர்களை சேவித்தல் மற்றும் தேவன் விட்டு அகலுகிற இருதயத்தை நஞ்சு எண்டி முளைப்பிக்கிற வேர் என்று வாசிக்கிறோம். ஆக சபையில், இருந்து கொண்டு செய்யும் பாவம் அல்லது மீறுதல் மற்றவரையும் தீட்டுப்படுத்தும் அபாயமுள்ளது என்று அறிகிறோம். அப்படி இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் ஏந்திரக் கல்லைக்கட்டி சமுத்திரத்தில் போடுவது மேல் என்றும் அவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும் (கலாத் 5:12) என்றும் வேதமும் எச்சரிக்கின்றது.

ஆகவே, சபையிலிருக்கும் நாம் நமக்கு வரும் சிட்சையில் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் தைரியமாய் இருக்க வேண்டும். பிரிவினை அல்லது சண்டைகளைத் தவிர்த்து யாவரோடும் சமாதானமாய் இருக்கவும், சுத்த இருதயத்தோடே ஒருவரில் ஒருவர் அன்புக்கூரவும் கடமைப்பட்டுள்ளோம். அவிசுவாசிகளிடம் அதிகம் பழகாமல் இருக்கவும் அப்போதுதான் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாய் இருப்பீர்கள் என்று தேவன் வாக்கு பண்ணியுள்ளர். எனவே, நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலை தெய்வ பயத்தோடே பூரணப்படுத்தும் பொறுப்பு (2கொரி 7:1) நம் அனைவருக்கும் உள்ளதை உணர்ந்து சபை வாழ்வை. தொடருவோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை அனைவரோடும் இருப்பதாக ஆமென்.


✝


---

**வேதாகம பொன் உரை – யோவான்3:16**

1. *தேவன் ஒப்பிடமுடியாத தனித்தன்மை உடையவர்*
2. *ஒரே பேறான குமாரன் - வேறொன்றும் நிகரற்ற*
3. *விசுவாசம் மனித வாழ்நாள் முழுவதும் சவாலான*
4. *எவனோ - எல்லோருக்குமான*
5. *கெட்டுப்போகாமல் அழிவில்லாத வாக்கு*
6. *நித்திய ஜீவன் - முடிவில்லா ஐசுவரியம்*
7. *தந்தருளி அசாதாரணமான செயல்*
8. *உலகத்தில்பரந்த அளவிலான*
9. *இவ்வளவான அன்பு - தீவிரமான உணர்வு*


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm


Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

செவ்வாய் காலை 6:30 – 7:00 மணி
வெள்ளி காலை 6:30 – 7:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.